**CC.No. 52/2023 (JM.No.II, DHARMAPURI)**

**10.10.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர்)**

**PW–2 : திரு. இளையராஜா, த/பெ.வரதராஜன்**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தொங்கனூரில் குடியிருந்து நடத்துநராக பணிபுரிந்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கலைமதி என்னுடைய அக்கா, ரவிசந்திரன் என் மாமா ஆவார். அ.சா.1 என்னுடைய உடன்பிறந்த தம்பி ஆவார். கடந்த 7, 8 வருடங்களுக்கு முன்பு என்னுடைய தாத்தா காவேரிகவுண்டர் அவர்கள் வாய்மொழி மூலமாக 5 ஏக்கர் நிலம் எங்களுக்கு விட்டு அதில் நாங்கள் விவசாயம் செய்துவந்தோம். என்னுடைய அப்பா வரதராஜன் ஆவார். அவருக்கு 2 மனைவிகள். முதல் மனைவி ரஞ்சிதம்மாள், அவர்களுக்கு 2–ஆண், 2–பெண் வாரிசுகள் ஆவார். இரண்டாம் மனைவி கஸ்தூரி ஆவார். அவர்களுக்கு பிறந்தவர்கள் தான் நானும், நெப்போலியனும் ஆவோம். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு எதிரி ரவிசந்திரன், வரதராஜன் மற்றும் கலைமதி ஆகியோர் சேர்ந்துகொண்டு நெடுமாறன் நகரில் என்னுடைய தாத்தா காவேரிகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தை ரவிசந்திரன் மட்டும் தான் இந்த சொத்திற்கான வாரிசு என்று கூறி போலியாக வாரிசு சான்றிதழ் ஒன்றினை 2005ம் வருடம் வாங்கியிருந்தார். அந்த போலி சான்றிதழ் உண்மையை அறியும்பொருட்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தின்கீழ் கேட்டோம். பாப்பிரெட்டிபட்டியில் உள்ள தாலுக்கா அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் சம்மந்தமாக கேட்டபோது இந்த மாதிரியான வாரிசு சான்றிதழ் எதுவும் எங்கள் அலுவலகத்தில் பதிவுசெய்யவில்லை என்று தகவல் தெரிவித்தார்கள். இதுதொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் எனது தம்பி நெப்போலியன் புகார் மனு அளித்தார். இதன்மீது நடவடிக்கை எடுக்ககோரி DCB காவல் துறைக்கு இந்த மனு அனுப்பப்பட்டது. இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1. இந்த வழக்கு சம்மந்தமாக சொத்து காவேரிகவுண்டர் சொந்தமாக வாங்கிய சொத்து என்றாலும், அச்சொத்து தருமபுரி நகரில் உள்ளது என்றாலும் சரிதான். காவேரிகவுண்டர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். காவேரிகவுண்டருக்கு வரதராஜன், ரஞ்சிதம் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். வரதராஜனின் உடன்பிறந்த சகோதரி ரஞ்சிதத்தின் மகன் தான் எதிரி ரவிசந்திரன் என்றால் சரிதான். வரதராஜனின் முதல் மனைவி பெயரும் ரஞ்சிதம் என்றால் சரிதான். காவேரிகவுண்டர் எங்களுக்கு சொத்து கொடுத்தற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான், வாய்மொழியாக கொடுத்தார். பாப்பிரெட்டிபட்டி நீதிமன்றத்தில் வரதராஜன் மீது பாகம்கேட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். வரதராஜனின் இரண்டாவது மனைவியின் குழந்தைகள் என்ற அடிப்படையில் மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

2. காவேரிகவுண்டர் விற்றுசென்ற சொத்தில் அவரது மகன் வரதராஜன், ரஞ்சிதம் ஆகியோருக்கு சமமான பங்கு உள்ளது என்றால் சரிதான். வரதராஜன் உடன்பிறந்த ரஞ்சிதம் குடும்பத்திற்கும், எங்களுடைய குடும்பத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். மேற்படி ரஞ்சிதம் குடும்பத்திற்குள் என்ன குடும்ப ஏற்பாடுகள் அவர்களுக்குள் செய்துகொண்டனர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பத்திரங்கள் பற்றிய தகவல்கள் அனைத்தும் என் தம்பிதான் உரிய அலுவலகத்திற்கு சென்று பெற்றுவந்தார் என்றாலும், எனக்கு அதை பற்றி நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். வழக்கில் குறிப்பிட்டுள்ள பத்திரமானது எங்கு, யாரால், எப்படி தயாரிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. போலியாக தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் வாரிசு சான்றிதழ் எங்கு, யாரால், எப்படி தயாரிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் தம்பி எந்த தேதியில் புகார் அளித்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்வதற்கு முன்பு DCB காவல் நிலையத்தில் விசாரணை ஏதாவது நடைபெற்றதா என்று எனக்கு தெரியாது. ரவிசந்திரனின் உடன்பிறந்தவர்கள் ரவிசந்திரனுக்கு விடுதலை பத்திரம் எழுதிகொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால், அதை பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கில் சொல்லப்பட்டுள்ள தருமபுரி நகரத்தில் இருக்கும் சொத்திற்கும், எங்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

4. என் தம்பி அ.சா.1 இந்த வழக்கு சம்மந்தமாக புகாரின்பேரில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் 1ம் எதிரி வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. மாண்புமிகு உயர்நீதிமன்றம் மேற்படி வழக்கில் உரிமையியல் வழக்கு என்றும், உரிமையியல் நீதிமன்றத்தில் பார்த்துகொள்ளுமாறும், போலிசார் விசாரணைக்கு உகந்த வழக்கு இல்லை என்று கூறியுள்ளது என்றால், அதை பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல எதிரிகள் எந்தவித போலி பத்திரங்களும் தயாரிக்கவில்லை என்றாலும், அவர்கள் சொத்தில் உள்ள உரிமையை அனுசரித்து தான் பத்திரம் எழுதியுள்ளனர் என்றாலும் சரியல்ல. என் தம்பியும், நானும் சொத்தை அபகரிக்கவேண்டி பொய்யான வழக்கை எதிரிகள் மீது கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. அதனை அனுசரித்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.II,
தருமபுரி.